Tamil / தமிழ்

# தலையீட்டு உத்தரவுகள்

## இவற்றைப் பற்றிய தகவல்கள்

SOUTH AUSTRALIA POLICE
KEEPING SA SAFE

Government of South Australia

சவுத் அவுஸ்திரேலிய மாநிலக் காவல்துறையினரது முயற்சியின் காரணமாக இந்த வெளியீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது, மற்றும் இதைத் தயாரிக்கும்போது அனைத்துவிதமான கவனமும் செலுத்தப்பட்டிருந்தாலும், இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அறிவுரை ஆகியவற்றின் துல்லியத்தன்மை, செல்லுமை அல்லது பொருத்தம் ஆகியவற்றிற்கான உத்தரவாதம் எதுவும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ கொடுக்கப்படவில்லை. மற்றும் இதில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்திய காரணத்தால் அல்லது அவற்றின் மீது சார்ந்திருந்த காரணத்தால் எவருக்காவது ஏற்படும் எந்தவொரு இழப்பிற்கும் சவுத் அவுஸ்திரேலிய மாநிலம், அதன் முகமைகள், சவுத் அவுஸ்திரேலிய காவல்துறை மற்றும் அதன் முகவர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் எவ்விதமான பொறுப்பையும் ஏற்கமாட்டார்கள்.

©சவுத் அவுஸ்திரேலிய மாநில காவல்துறை
'குடும்ப வன்முறைக் கிளை' யின் பொறுப்பதிகாரியினது அங்கீகாரத்துடனும், ஒவ்வொரு மீளுற்பத்தியிலும் தகுந்த ஏற்புக்கூற்று அறிவிக்கப்படும் பட்சத்திலும் இந்த வெளியீட்டில் உள்ள விடயங்கள் மீளுற்பத்தி செய்யப்படலாம்.

Family and Domestic Violence Branch
GPO Box 1539, Adelaide, SA, 5001
sapol.interventionordermanagement@police.sa.gov.au

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| குடும்ப வன்முறை என்பது என்ன? | 2 |
| தலையீட்டு உத்தரவு என்பது என்ன? | 3 |
| தலையீட்டு உத்தரவு ஒன்றைப் பெறுவது எப்படி? | 3 |
| காவல்துறையினரால் தரப்படும் உத்தரவுகள் | 4 |
| காவல்துறையினர் உத்தரவு ஒன்றை ஏற்படுத்திய பிறகு என்ன நடக்கும்? | 5 |
| நீதிமன்றத்தால் தரப்படும் உத்தரவுகள் | 6 |
| விண்ணப்பம் ஒன்று விசாரணைக்கு வரும்போது நீதிமன்றத்தில் சமூகமளித்தல் | 8 |
| தலையீட்டு உத்தரவு ஒன்று வழங்கப்பட்ட பிறகு என்ன ஆகும்? | 10 |
| அடுத்து நடப்பது என்ன? | 11 |
| அடுத்த நபர் தலையீட்டு உத்தரவை மீறினால் என்ன ஆகும்? | 12 |
| ‘குடும்ப நீதிமன்ற உத்தரவுகள்’ என்பன யாவை? | 13 |
| 25 நவம்பர் 2017–க்குப் பிறகு கொடுக்கப்படும் தலையீட்டு உத்தரவுகள் | 13 |
| 25 நவம்பர் 2017–க்கு முன்பு கொடுக்கப்பட்ட தலையீட்டு உத்தரவுகள் | 14 |
| தலையீட்டு உத்தரவை மாற்றவேண்டும் என்றால் என்ன செய்வது? | 15 |
| உதவிக்கு யாரை அழைப்பது? | 16 |

# குடும்ப வன்முறை என்பது என்ன?

மண வாழ்க்கை, சேர்வாழ்க்கை, சந்திப்பு நேரங்கள் அல்லது குடும்பப் பரம்பரையினர் சேர்ந்து வாழும் குடும்பம் ஆகியவற்றில் ஒரு நபர் இன்னொரு நபரை துஷ்பிரயோகப்படுத்தித் தொடர்ந்து நடத்திவரும் முறை குடும்ப வன்முறையாகும். உடல்ரீதி மற்றும் பால்ரீதி வன்முறை, தூசன ஏச்சுக்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல், உணர்வுரீதியான மற்றும் சமூகரீதியான துஷ்பிரயோகம், பின்தொடரல், பொருளாதாரப் பறிப்பு மற்றும் சொத்து சேதாரம் ஆகியன குடும்ப வன்முறையில் உள்ளடங்கும். நமது சமூகங்களின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து வயதினர் மற்றும் கலாசாரங்களைச் சார்ந்தோர்களிடையேயும் குடும்ப வன்முறை நிகழ்கிறது.

குடும்ப வன்முறையை குடும்பத் துஷ்பிரயோகம் என்றும் சிலவேளைகளில் சொல்வார்கள். இதன் பெயர் எதுவாக இருந்தாலும், இந்தத் துஷ்ப்பிரயோக நடத்தைகள் அனைத்தும் நமது சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை, மற்றும் இவற்றில் சில கண்கூடாக சட்டத்திற்குப் புறம்பானவை.

குடும்ப வன்முறைக்குப் பலியாபவர்கள், அவர்களுடைய குழந்தைகள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் ஆகியோர் மீது குடும்ப வன்முறையானது சேதம் விளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை சவுத் அவுஸ்திரேலிய மாநிலக் காவல்துறை அறிகிறது. குடும்ப வன்முறைக்குப் பலியாபவர்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுடைய நீண்டகாலப் பாதுகாப்பிற்கு சவுத் அவுஸ்திரேலியக் காவல்துறை அதியுயர் முந்துரிமை அளிக்கிறது, மற்றும் இயலுமான தருணங்களில், வன்முறைக்குக் காரணமான நபர்களை அவர்களுடைய செயல்களுக்குப் பொறுப்பேற்குமாறு செய்கிறது.

நீங்கள் குடும்ப வன்முறைக்குப் பலியான ஒரு நபர் என்றால், உங்களையும் உங்களுடைய குடும்பத்தாரையும் ‘தலையீட்டு உத்தரவு’ ஒன்றினால் பாதுகாக்க இயலும் (இது முன்னராகக் ‘கட்டுப்படுத்து உத்தரவு’ என்று அழைக்கப்பட்டது). ‘தலையீட்டு உத்தரவு’ ஒன்றைப் பெறுவதற்காக நீங்கள் காவல்துறையினரோடு தொடர்புகொள்ளும்போது என்ன நடக்கும் என்பதை இந்தக் குறுநூல் உங்களுக்கு விளக்கிச் சொல்லும். உங்களுடைய கேள்விகளுக்கு இது பதிலளிக்கும் என்றும், என்ன செயவது என்று முடிவு செய்வதில் உங்களுக்கு உதவும் என்றும் நம்புகிறோம்.

# தலையீட்டு உத்தரவு என்பது என்ன?

உங்களைத் தொல்லைப்படுத்தக்கூடிய, அச்சுறுத்தக்கூடிய அல்லது துஷ்பிரயோகம் செய்யக்கூடிய அல்லது வன்முறைத்தனமானதாக இருக்கக்கூடிய விதத்தில் உங்களுடன் நடந்துகொள்வதிலிருந்து ஒரு நபரை(பிரதிவாதியை)த் தடுத்து காவல்துறையினர் அல்லது நீதிமன்றத்தினால் கொடுக்கப்படும் உத்தரவு ஒன்று 'தலையீட்டு உத்தரவு' எனப்படும். உங்களுடைய (பாதுகாப்பு அளிக்கப்படும் நபர்) வீட்டிற்கும் நீங்கள் வேலை செய்யும் இடத்திற்கும் வரக்கூடாது, உங்களுடைய குழந்தைகள் படிக்கும் பாடசாலைக்குப் போகக்கூடாது, உங்களைப் பின்தொடரவோ அல்லது கண்காணிக்கவோ கூடாது, உங்களைத் தொலைபேசியில் அழைக்கக்கூடாது அல்லது உங்களுக்குச் செய்திகள் அனுப்பக்கூடாது என்பதைப் போன்ற வெவ்வேறு வகையான காரியங்களைச் செய்யக்கூடாது என்று மற்ற நபருக்கு உத்தரவு இடப்படலாம். உங்களுடன் அவர் சேர்ந்து வாழும் வீட்டை விட்டு **வெளியேறுவது** என்பதைப் போன்ற குறிப்பிட்ட சில காரியங்களைச் **செய்யவேண்டும்** என்பதைப் போன்ற உத்தரவும் மற்ற நபருக்கு இடப்படலாம். உங்களுக்கும் உங்களுடைய சூழ்நிலைக்கும் ஏற்ற குறிப்பிட்ட உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட இயலும்.

**மற்ற நபர் (பிரதிவாதி) உத்தரவிற்குக் கீழ்ப்படியாமல் இருப்பது ஒரு குற்றச்செயல். இது உத்தரவை 'மீறல்' என்று அழைக்கப்படும். மற்ற நபர் உத்தரவை மீறியிருக்கிறார் என்று நீங்கள் நம்பினால், நீங்கள் காவல்துறையினருக்குத் தெரிவிப்பது நல்லது.**

# தலையீட்டு உத்தரவு ஒன்றைப் பெறுவது எப்படி?

தலையீட்டு உத்தரவுகள் காவல்துறையினரால் ஏற்படுத்தப்படலாம், அல்லது நீதிமன்றங்களினால் ஏற்படுத்தப்படலாம் (இது இடைக்காலத் தலையீட்டு உத்தரவு என்று அழைக்கப்படும்) . உங்களுக்கு உதவுவதற்கான தலையீடு ஒன்று இல்லாதபோது , மற்ற நபரால் நீங்கள் துஷ்பிரயோகச் செயலுக்கு ஆளாவீர்கள் என்று காவல்துறையினர் அல்லது நீதிமன்றம் நம்பவேண்டியது அவசியம். துஷ்பிரயோகச் செயல் ஒன்றிற்கான பல உதாரணங்கள் உள்ளன, மற்றும் உங்களுடைய சூழ் நிலை என்ன என்று காவல்துறையினர் செவிமடுத்துக் கேட்ட பிறகு, தலையீட்டு உத்தரவு ஒன்றை வேண்டுவதற்கு அது பொருத்தமானதா என்பதை உங்களுக்குச் சொல்வார்கள்.

உங்களுக்குத் தகுந்த காரணங்கள் இருந்தால், துஷ்பிரயோகம் செய்யும் நபருக்கு நேரடியாக தலையீட்டு உத்தரவு ஒன்றைக் கொடுக்கவோ, அல்லது உத்தரவு ஒன்றை கொடுக்குமாறு கேட்டு நீதிமன்றத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க உதவி செய்யவோ காவல்துறையினர் முடிவு செய்வர். எந்த வழி பாவிக்கப்படுகிறது என்பதை சூழ்நிலைகள் முடிவு செய்யும். ஒவ்வொரு வழியும் இந்தக் குறுநூலில் விளக்கிச் சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் செய்யவேண்டியது என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்காக இந்த இரண்டு வழிகளையும் நீங்கள் வாசிப்பது நல்லது.

# காவல்துறையினரால் தரப்படும் உத்தரவுகள்

குடும்ப வன்முறை நிகழ்ந்த இடம் ஒன்றிற்குக் குற்றச்செயலைச் (உங்களைத் தாக்குவது அல்லது உங்களுடைய உடைமைகளை சேதப்படுத்துவது போன்ற செயல்கள்) செய்த, அல்லது குற்றச் செயல் ஒன்றைச் செய்யப்போவதாக அச்சுறுத்திய நபர் அவ்விடத்தில் இருக்கும்போது காவல்துறையினர் வரவழைக்கப்பட்டாலோ, அல்லது அந்த நபர் காவல்துறைத் தடுப்பில் இருக்கும்போதோ காவல்துறையினரால் இடைக்காலத் தலையீட்டு உத்தரவு ஒன்றைக் கொடுக்க இயலலாம், அத்தோடு செய்யப்பட்டதாய்ச் சொல்லப்படும் குற்றத்தினை அவர்கள் விசாரிக்கலாம்.

முதலில், நடந்தது என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்காகக் காவல்துறையினர் உங்களுடன் பேசுவார்கள். மற்ற நபரால் உங்களுக்கும் உங்களுடைய குழந்தைகளுக்கும் ஏற்படும் ஆபத்தினை அவர்கள் மதிப்பீடு செய்வார்கள். தலையீட்டு உத்தரவு ஒன்றினை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் இருப்பதாகவும், மேலதிகத் தீங்கிலிருந்து உத்தரவு ஒன்று உங்களைப் பாதுகாக்கும் என்றும் அவர்கள் நினைத்தால், இச் சமயத்தில் அவர்கள் இடைக்கால உத்தரவு ஒன்றினைப் பிறப்பிப்பார்கள். உங்களுடைய குழந்தைகளும் ஆபத்திலிருந்தால் அவர்களும் இந்த உத்தரவில் உள்ளடக்கப்படலாம்.

இந்தச் செயல்முறையின் ஒரு பகுதியாக, என்ன நடந்தது என்பதைப் பற்றிய உங்களுடைய விளக்கத்தையும், தலையீட்டு உத்தரவு உங்களுக்கு ஏன் தேவைப்படுகிறது என்பதைப் பற்றியுமான வாக்குமூலம் ஒன்றையும் காவல்துறையினர் உங்களிடமிருந்து வேண்டுவார்கள். குற்றச்செயலைப் பற்றிய வாக்குமூலம் ஒன்றைக் காவல்துறையினர் உங்களிடமிருந்து ஏற்கனவே பெற்றிருந்தால் (நீங்கள் தாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதைப் போன்ற குற்றச்செயல்கள்), அதே வாக்குமூலத்தினைக் காவல்துறையினரால் பாவிக்க இயலக்கூடும்.

காவல்துறையினருக்கு நீங்கள் தெரிவிக்கவேண்டிய முக்கியமான மற்ற தகவல்கள் இருக்கலாம். உதாரணத்திற்கு, அடுத்த நபரிடம் துப்பாக்கி இருக்கிறது என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் அதை காவல்துறையினருக்குத் தெரிவிப்பதை உறுதிப்படுத்துங்கள். இது ஏன் என்றால், தலையீட்டு உத்தரவு ஏற்படுத்தப்பட்டவுடன், பிரதிவாதியின் வசம் துப்பாக்கி எதுவும் இருந்தால் காவல்துறையினர் அதை அவரிடமிருந்து அகற்றி, காவல்நிலையத்தில் வைத்திருப்பார்கள்.

'குடும்ப நீதிமன்ற உத்தரவு' (Family Court Order) ஏதுமிருந்தால், அதையும் நீங்கள் காவல்துறையினருக்குத் தெரிவிக்க வேண்டும். உங்களுடைய தலையீட்டு உத்தரவு உங்களது 'குடும்ப நீதிமன்ற உத்தர'வுடன் இணைவாய்ச் செயல்படவேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறது. 'குடும்ப நீதிமன்ற உத்தர'வின் பிரதி ஒன்று உங்களிடம் இருந்தால், காவல்துறையினருக்கு நீங்கள் அதைக் கொடுப்பது உதவிகரமாக இருக்கும். பிரதி ஒன்று உங்களிடம் இல்லை என்றால், 'குடும்ப சட்ட நீதிமன்ற'(Family Law Court)த்திடமிருந்து காவல்துறையினரால் பிரதி ஒன்றைப் பெற இயலும்.

# காவல்துறையினர் உத்தரவு ஒன்றை ஏற்படுத்திய பிறகு என்ன நடக்கும்?

தலையீட்டு உத்தரவு ஒன்று கொடுக்கப்பட்டவுடன், காவல்துறையினர் உத்தரவின் பிரதி ஒன்றை மற்ற நபருக்குச் (பிரதிவாதிக்குச்) சேர்ப்பித்து, உத்தரவில் உள்ள விடயங்களை அடுத்த நபருக்கு விளக்கிச் சொல்வார்கள். தலையீட்டு உத்தரவின் பிரதி ஒன்று பிரதிவாதிக்குக் கொடுகப்பட்டவுடன், அந்த உத்தரவில் அட்டவணையிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் அவர் கட்டுப்பட்டாக வேண்டும்.

காவல்துறையினரது இடைக்காலத் தலையீட்டு உத்தரவு ஒன்று அது சேர்ப்பிக்கப்பட்டவுடன் நடைமுறையில் இருக்கத் துவங்கிவிடும்.

உத்தரவின் பிரதி ஒன்று உங்களுக்கும் கொடுக்கப்படும். உண்மையில், பாதுகாக்கப்படும் நபர் என்று பெயர் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொருவரும் பிரதி ஒன்றைப் பெறுவார்கள், ஆகவே உங்களுடைய பிள்ளைகள் அட்டவணையிடப்பட்டு இருந்தால், அவர்களும் பிரதி ஒன்றைப் பெறுவார்கள். அல்லது அவர்கள் மிககவும் இளையவர்கள் என்றால், அவர்களுக்கான பிரதிகளை நீங்கள் பெறுவீர்கள்.

பிரதிவாதிக்குக் காவல்துறை அதிகாரி கொடுக்கும் உத்தரவானது அவர் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கான அழைப்பாணையும் ஆகும். நீதிமன்ற விசாரணைக்கான நேரம், திகதி மற்றும் இடம் ஆகியன அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். பொதுவாக உத்தரவு கொடுக்கப்பட்ட எட்டு நாட்களுக்குள் இது நடக்கும். நாட்டுப்புறங்களில் நீதிமன்றங்கள் அடிக்கடி நடத்தப்படுவதில்லை என்பதால் அப்படிப்பட்ட இடங்களில் இதை விட அதிக நாட்கள் ஆகலாம். **இந்த முதல் நீதிமன்றத் திகதிக்கு நீங்கள் செல்ல வேண்டியதில்லை**.

இந்த விசாரணையின் போது நீதிபதி உத்தரவினை மீள்பரிசீலனை செய்வார், மற்றும் உத்தரவில் அவருக்கு சம்மதம் என்றால், அது ஒரு இடைக்கால உத்தரவாக நீடிக்கும், அல்லது அவர் அதனை உறுதிப்படுத்துவார் (நிரந்தரமாக அதை நிலைப்படுத்துவார்), அல்லது மாற்றுவார் (உத்தரவின் நிபந்தனைகளை மாற்றி அதை பிரதிவாதிக்கு மீண்டும் கொடுப்பார்), அல்லது அதை மீளப்பெறுவார் (ரத்து செய்வார்).

இந்த விசாரணையின் முடிவு என்ன என்பதை காவல்துறை வழக்கு விசாரணையாளர் அல்லது மற்றொரு காவல்துறை அதிகாரி உங்களுக்குத் தெரியப்படுத்துவார்.

# நீதிமன்றத்தினால் ஏற்படுத்தப்படும் உத்தரவுகள்

அவசரமல்லாத மற்ற சூழ்நிலைகளில், அல்லது மற்ற நபர் அவ்விடத்தில் இல்லாதபோது, தலையீட்டு உத்தரவு ஒன்றினை வழங்குமாறு கேட்டு நீங்கள் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும். உங்கள் சார்பாக விண்ணப்பம் ஒன்றை ஆயத்தம் செய்வதன் மூலம் காவல்துறையினரால் இப்போதும் உங்களுக்கு இப்படிச் செய்ய உதவ இயலும்.

நீங்கள் ஒரு காவல் நிலையத்திற்குச் சென்று, அங்கு காவல்துறையினரிடம் என்ன நடந்தது என்பதை நீங்கள் விளக்கிச்சொல்லி, அதை அவர்கள் செவிசாய்த்துக் கேட்டு தலையீட்டு உத்தரவிற்கான காரணங்கள் உங்களிடம் இருக்கின்றனவா என்று முடிவு செய்வார்கள். உங்களுக்குக் காரணங்கள் இருந்தால், காவல்துறையினர் உங்களிடமிருந்து வாக்குமூலம் ஒன்றினைப் பெற்று, உங்களுடைய சூழ்நிலைகளையும், தலையீட்டு உத்தரவு உங்களுக்கு ஏன் தேவை என்றும் விளக்கிச் சொல்வார்கள்.

உங்களுடைய வாக்குமூலத்தினை நீங்கள் கொடுக்க சிலபல மணி நேரம் ஆகக்கூடும், ஆகவே இயன்ற அளவிற்கு ஆயத்தமாகவும், தெளிவாகவும் இருக்க முயற்சியுங்கள். நீங்கள் சொல்வதற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய எவ்வொரு சான்றையும் அல்லது தகவல்களையும் உடன் எடுத்துச் செல்லுங்கள். இதில் உள்ளடங்கக்கூடியன:

- விடயங்கள் எப்போது, எங்கு நிகழ்ந்தன என்பது உட்பட, மற்ற நபர் என்ன செய்தார் என்பதைப் பற்றி நீங்கள் எழுதி வைத்திருக்கும் குறிப்புகள் எதுவும்
- உங்களுடைய உடைமைக்கு மற்ற நபர் ஏற்படுத்தியிருக்கும் சேதாரத்தின் படங்கள் எதுவும்
- மற்ற நபர் உங்களுக்கு அனுப்பியிருக்கக்கூடிய குறிப்புகள், கடிதங்கள், மின்னஞ்சல்கள் அல்லது குறுஞ்செய்திகளின் பிரதிகள்
- நீங்கள் மருத்துவர் ஒருவரிடம் சென்றிருந்தால், மருத்துவத் தகவல்கள் அல்லது அறிக்கைகள்
- உங்களுடைய பிள்ளைகளுக்குப் பொருந்திவரும் ‘குடும்ப நீதிமன்ற உத்தரவுகள்’ ஏதுமிருப்பின் அவற்றின் பிரதிகள்

மீண்டும் நினைவூட்டுகிறோம், மற்ற நபரிடம் துப்பாக்கி இருக்கிறது என்று நீங்கள் நினைத்தால், காவல்துறையினரிடம் அதைச் சொல்லுங்கள். தலையீட்டு உத்தரவு ஒன்று ஏற்படுத்தப்பட்டால், மற்ற நபரிடமிருந்து (பிரதிவாதி) துப்பாக்கியை அகற்ற வேண்டும் என்ற உத்தரவையும் நீதிமன்றம் ஏற்படுத்தும்.

இயலுமானால், உங்களுடைய வாக்குமூலத்தை நீங்கள் கொடுத்துக்கொண்டிருக்கும்போது, தேவையில்லாத அழுத்தத்தை உங்கள் குழந்தைகள் எதிர்கொள்ளாமல் இருக்கும் விதத்தில் அவர்களுக்கு மாற்று கவனிப்பு ஏற்பாடுகளைச் செய்வது நல்லதொரு யோசனையாகும். உங்களுடைய சூழ்நிலைகளைப் பற்றிக் காவல்துறையினருடன் பேசுவது உங்களை நிலைகுலையச் செய்யலாம், ஆகவே இது உங்கள் குழந்தைகளையும் நிலைகுலையச் செய்யலாம். இருந்தாலும், குழந்தைகளுக்கான மாற்று கவனிப்பு வசதி கிடைக்கவில்லை என்றால், காவல்நிலையத்திற்கு நீங்கள் குழந்தைகளை உடன் அழைத்துவருவது சரியே.

உங்களுடய வாக்குமூலம் பூர்த்திசெய்யப்பட்ட பிறகு, காவல்துறையினர் நீதிமன்றக் கோப்பு ஒன்றைத் தயார் செய்து காவல்துறையினரது 'வழக்குத்தொடுப்புப் பிரி'விற்கு அதை அனுப்புவார்கள். பிறகு, உங்களுக்கான உத்தரவை ஏற்படுத்துமாறு நீதிமன்றத்தைக் கேட்பதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றனவா என்று காவல்துறை வழக்குத்தொடுப்பினர் சோதிப்பார். காரணங்கள் இருந்தால், உங்களுக்காகக் காவல்துறையினர் நீதிமன்றத்தில் ஆஜராவார்கள்.

**பொதுவாக நீங்கள் நீதிமன்றத்திற்கு வரவேண்டியிருக்கும், இருந்தாலும் சொல்லவேண்டியதை உங்களுக்காகக் காவல்துறையினரே சொல்வார்கள்.**

நீதிமன்ற விண்ணப்பங்களைப் பொறுத்தவரை, யாருக்கு எதிராக தலையீட்டு உத்தரவு கேட்டு நீங்கள் விண்ணப்பித்திருக்கிறீர்களோ அந்த நபர் உங்கள் விண்ணப்பத்திற்காக நீதிமன்றத்தில் இருக்கமாட்டார். வேறு காரணத்தை முன்னிட்டு அவர்கள் நீதிமன்றத்தில் இருந்தால், மற்றும் பாதுகாப்பு இல்லாத உணர்வு உங்களுக்கு இருந்தால் காவல்துறை அதிகாரி ஒருவர் அல்லது நீதிமன்றப் பணியாளர் ஒருவருக்கு இதைத் தெரியப்படுத்துங்கள்.

# விண்ணப்பம் ஒன்று விசாரணைக்கு வரும்போது நீதிமன்றத்தில் சமூகமளித்தல்

தலையீட்டு உத்தரவு ஒன்றைக் கொடுக்குமாறு கேட்டு நீங்கள் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் இட்டிருந்தால், எந்த நீதிமன்றத்திற்கு நீங்கள் செல்லவேண்டும், மற்றும் திகதி மற்றும் நேரம் என்ன என்பதைக் காவல்துறையினர் உங்களுக்குத் தெரிவிப்பர்.

பாதுகாப்பு சோதனையைக் கடந்து சென்று, உங்களுடைய விடயம் எந்த நீதிமன்ற அறையில் விசாரிக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள வசதியாக நீங்கள் சில நிமிடங்களுக்கு முன்னதாக வருவது நல்லது. எந்த நீதிமன்ற அறைக்கு நீங்கள் செல்லவேண்டும் என்பதை தகவல் மேசையில் உள்ள ஊழியர்களால் உங்களுக்குச் சொல்ல இயலும்.

நீங்கள் தாமதமாகிக்கொண்டிருந்தால், அல்லது நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றால் காவல்துறையினர் அல்லது நீதிமன்றத்திற்கு முன்னதாகவே அறிவித்து உங்களுடைய காரணங்களை விளக்கிச் சொல்லுங்கள்.

**பெருநகர்ப்பகுதி (metropolitan)** நீதிமன்றம் ஒன்றில் நீங்கள் சமூகமளித்தால், 'குழந்தை மற்றும் குடும்ப ஆய்வுப் பிரி'(Child and Family Investigation Section) வில் இருந்து வரும் காவல்துறை அதிகாரி ஒருவர் உங்களைச் சந்தித்துப் பேசுவார். **நாட்டுப்பகுதி (country)** நீதிமன்றம் ஒன்றில் நீங்கள் சமூகமளித்தால், காவல்துறை வழக்குத்தொடுனர் உங்களை அணுகுவார்.

தலையீட்டு உத்தரவு கேட்டு விண்ணப்பிக்கும் மற்ற சிலரும் நீதிமன்றத்தில் இருக்கலாம், ஆகவே உங்களுடைய விண்ணப்பத்தை விசாரிக்க நீதிபதி தயாராகும் வரை நீதிமன்ற அறைக்கு வெளியே காத்திருக்குமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள். உங்களுடைய அந்தரங்கத்தன்மையைப் பாதுகாப்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறது.

உங்களுடைய விண்ணப்பத்தை விசாரிக்க நீதிபதி தயாராக இருக்கும்போது, நீதிமன்ற அறைக்குள் வந்து பின்னால் உள்ள இருக்கைகளில் அமருமாறு நீதிமன்ற அதிகாரி ஒருவர் உங்களைக் கேட்பார். யாருக்கு எதிராக நீங்கள் உத்தரவு கேட்டு விண்ணப்பித்திருக்கிறீர்களோ அவருடைய பெயர் சொல்லப்படுவதை நீங்கள் கேட்கும்போது உங்களுடைய விடயம் விசாரணைக்காக 'அழைக்கப்படுகிறது' என்று அர்த்தம். இது ஒரு நீதிமன்ற சம்பிரதாயம், மற்றும் உங்களுடைய விண்ணப்பத்தினைக் கருத்தில் கொள்ள நீதிபதி ஆயத்தமாக இருக்கிறார் என்பதை இது குறிக்கும்.

**நீங்கள் அமர்ந்த நிலையில் இருப்பது நல்லது. நீதிபதி, நீதிமன்ற அத்காரி அல்லது ஒரு காவல்துறை அதிகாரியால் கேட்கப்பட்டாலொழிய, நீங்கள் எதுவும் செய்யவேண்டியதில்லை.**

எதையாவது தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்றால், உங்களிடம் கேள்வி கேட்கப்படுவதற்காக சாட்சிக் கூண்டிற்குள் வருமாறு உங்களை நீதிபதியானவர் கேட்கலாம். இருந்தாலும், பெரும்பான்மைச் சமயங்களில் நீதிமன்ற அறையின் பின் இருக்கையில் நீங்கள் அமர்ந்திருக்கும்போதே அவர் உங்களைக் கேட்பார், மற்றும் நீங்கள் அங்கு இருந்தபடியே பதில் அளிக்கலாம். மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், காவல்துறை அதிகாரியும் உங்களைக் கேள்வி கேட்கலாம். கேள்விகளைக் கவனமாகச் செவிசாய்த்துக் கேட்டு, அவற்றிற்கு உண்மையாகப் பதிலளியுங்கள். நீதிபதியானவர் தனது முடிவினை மேற்கொள்ளும்போது, தலையீட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்றும், நிபந்தனைகள் என்ன என்பதையும் உங்களுக்குச் சொல்வார்.

நீங்கள் எதையாவது தவறவிட்டுவிட்டால் அல்லது சில விடயங்கள் உங்களுக்கு விளங்கவில்லை என்றால், விசாரணைக்குப் பிறகு நீங்கள் வழக்குத்தொடுனர் அல்லது 'குடும்ப வன்முறை' காவல்துறை அதிகாரியைக் கேட்கலாம். என்ன நடந்தது என்பதை அவர்கள் விளக்கிச் சொல்வார்கள் மற்றும் உங்களுக்கு இருக்கக்கூடிய கேள்விகள் எதற்கும் அவர்கள் பதிலளிப்பார்கள்.

# தலையீட்டு உத்தரவு ஒன்று வழங்கப்பட்ட பிறகு என்ன ஆகும்?

காவல்துறையினர் தலையீட்டு உத்தரவு ஒன்றைக் கொடுக்கும்போது, பிரதிவாதியாகப் பெயர் சொல்லப்பட்டுள்ள நபரிடம் காவல்துறை அதிகாரி **உத்தரவைச் சேர்ப்பித்த உடனே அது நடைமுறைக்கு வந்துவிடும்.** நீதிமன்றம் உத்தரவு ஒன்றைக் கொடுக்கும்போது, மற்ற நபருக்கு (பிரதிவாதி) **காவல்துறையினர் நேரடியாக உத்தரவின் பிரதி ஒன்றைக் கொடுக்கும் வரை** (உத்தரவைச் சேர்ப்பித்தல்) **உத்தரவு செயல்படத் துவங்காது** என்பதை நீங்கள் விளங்கிக்கொள்வது முக்கியம். கூடிய விரைவில் இதைச் செய்யக் காவல்துறையினர் முயன்றாலும், நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு இதற்கு சில நாட்கள் ஆகலாம்.

இயலுமானால், அடுத்த நபருக்குக் காவல்துறையினர் தலையீட்டு உத்தரவு ஒன்றைக் கொடுக்கப்போகிறார்கள் என்பதை அவருக்குச் சொல்லாதீர்கள், ஏனெனில் உத்தரவு தமக்குத் தரப்படக்கூடாது என்பதற்காக அவர்கள் காவல்துறையினரை வேண்டுமென்றே தவிர்க்கக்கூடும். அவரைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தால், அவருடைய வேலை விலாசம், அல்லது அவர் அடிக்கடி செல்லும் இடங்கள் போன்றவற்றைக் காவல்துறையினருக்குச் சொல்வதன் மூலம் உங்களால் உதவ இயலக்கூடும்.

**தலையீட்டு உத்தரவு சேர்ப்பிக்கப்பட்டவுடன், காவல்துறையினர் அதை உங்களுக்குத் தெரிவிப்பார்கள்,** இருந்தாலும், உத்தரவு நடைமுறைக்கு வந்துவிட்டதா இல்லையா என்று உங்களுக்குக் கவலையாக இருந்தால், உங்களுக்கு அண்மையிலுள்ள காவல்நிலையத்தில் நீங்கள் எச்சமயத்திலும் கேட்கலாம்.

நீதிமன்றத்தால் கொடுக்கப்படும் உத்தரவில், நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற சில நாட்களுக்குப் பிறகு தபால் மூலம் அல்லது காவல்துறையினரிடம் இருந்து உங்களுடைய தலையீட்டு உத்தரவின் **மூன்று பிரதிகளை** நீங்கள் பெறுவீர்கள். ஒரு பிரதியை பத்திரமான இடத்தில் வைத்துக்கொள்வதும், இன்னொரு பிரதியை உங்களுடன் (உதாரணமாக, உங்களுடைய கைப் பை, அல்லது காரில்) வைத்துக்கொள்வதும், மூன்றாவது பிரதியை அது தேவைப்படக்கூடிய எவ்வொரு நபருக்குக் கொடுப்பதும் (உதாரணமாக, உங்கள் பணியிடம், அல்லது உங்கள் பிள்ளை படிக்கும் பாடசாலை) நல்ல யோசனை. தேவைப்பட்டால் நீங்கள் மேலதிகப் பிரதிகளை எடுத்துக்கொள்ளலாம்.

மற்ற நபரால் (பிரதிவாதி) என்ன செய்ய இயலும், என்ன செய்ய இயலாது (நிபந்தனைகள்) என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக உங்களுடைய பிரதிகளை நீங்கள் கவனமாக வாசியுங்கள். இப்படிச் செய்தால், அடுத்த நபர் நிபந்தனைகளில் எதையும் மீறும் வகையில் ஏதாவது செய்கிறார என்பது உங்களுக்குத் தெரியும், அப்படிப்பட்ட தருணத்தில், நீங்கள் காவல்துறையினருடன் தொடர்புகொள்வது நல்லது.

# அடுத்து நடப்பது என்ன?

பிரதிவாதியானவர் உத்தரவிலுள்ள நிபந்தனைகளுக்கு சம்மதிக்கவில்லை என்றால் அவர் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய திகதி ஒன்று தலையீட்டு உத்தரவில் உள்ளடங்கியிருக்கும். காவல்துறையினரால் கொடுக்கப்பட்ட உத்தரவு மற்றும் நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட உத்தரவு ஆகிய இரண்டிற்கும் இது பொருந்தும். சம்மதமின்மை எதையும் தீர்த்துவைக்க காவல்துறையினர் முயற்சி செய்வர், மாற்றப்படும் வரை உள்ள எதுவும் மாறினால் அவர்கள் அதை உங்களுக்குச் சொல்வர்.

இந்த நீதிமன்ற விசாரணைக்குப் பிறகும் அவர் உத்தரவுடன் சம்மதப்படவில்லை என்றால், பிறகு ஒரு நீதிமன்ற வழக்கு நடைபெறும். இந்த கட்டத்தில் நீதிமன்றத்திற்கு வருமாறு நீங்கள் அழைக்கப்படலாம், மற்றும் உத்தரவிற்கு எதிர்ப்பு இருந்தால் நீங்கள் சாட்சியம் அளிக்க வேண்டியிருக்கலாம். எச்சமயத்திலாவது, ஒரே நேரத்தில் அடுத்த நபர் நீதிமன்றத்தில் இருந்தால், மற்றும் உங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத உணர்வு இருந்தால், காவல்துறையினரிடம் சொல்லுங்கள், மற்றும் உங்களுக்குப் பாதுகாப்பு உணர்வை அளிக்க முற்சிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

தலையீட்டு உத்தரவு ஒன்று நீதிமன்றத்தினால் மாற்றப்படும் வரை அல்லது இரத்து செய்யப்படும் வரை அது நடைமுறையில் இருக்கும் என்பதை நினைவில் கொள்ளவேண்டியது முக்கியம். தற்போதைய நிலை என்ன என்பதில் உங்களுக்கு சந்தேகம் இருந்தால், இப்போதைய நிலைமை மற்றும் விளக்கங்களுக்குக் காவல்துறையினரைக் கேளுங்கள். தலையீட்டு உத்தரவு எப்படி இயங்கிக்கொண்டிருக்கிறது மற்றும் இது உங்களை எப்படிப் பாதுகாக்கிறது என்பதை நீங்கள் விளங்கிக்கொள்வது உண்மையில் முக்கியம்.

# அடுத்த நபர் தலையீட்டு உத்தரவை மீறினால் என்ன ஆகும்?

அடுத்த நபரானவர் (பிரதிவாதி) உத்தரவிலுள்ள எவ்வொரு நிபந்தனைகளையாவது முறித்தால், அது 'மீறல்' எனப்படும். இது ஒரு குற்றச்செயல், மற்றும் இதற்காகப் பிரதிவாதி குற்றம் சாட்டப்படலாம்.

மற்ற நபர் உத்தரவை **மீறும் வகையில்** எதையும் செய்யக்கூடாது என்பதில் நீங்கள் சாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பது முக்கியம். உதாரணமாக, உங்களுடன் தொடர்புகொள்ள அடுத்த நபர் அனுமதிக்கப்படவில்லை என்றால், நீங்களும் அவரைப் பார்க்கப் போகக்கூடாது, அல்லது அவருடன் தொடர்பு கொள்ளக்கூடாது.

பிரதிவதியினால் தலையீட்டு உத்தரவு மீறல் ஒன்று உங்கள் முன்னிலையில் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அல்லது ஆபத்தில் இருப்பதாக நீங்கள் நினைக்கும்போது, நீங்கள் உடனடியாக **131 444 (அல்லது அவசரகாலம் ஒன்றில் '000')-வை அழைப்பது** நல்லது, உங்களுக்கு உதவ ரோந்துக்காவல் ஒன்று அனுப்பப்படலாம்.

தலையீட்டு உத்தரவு ஒன்று மீறப்பட்டுள்ளது, ஆனால் நீங்கள் உடனடி ஆபத்தில் இல்லை என்று நீங்கள் நினைத்தால், இந்த விடயத்தைக் காவல்துறையினர் ஆய்வு செய்யவேண்டும் என்பதற்காக **நீங்கள் இதை உள்ளூர் காவல் நிலையத்திற்கு அறிவிக்கவேண்டும்**.

நினைவில் கொள்ளுங்கள் – நீங்கள் ஒத்துழைக்கும் வரைதான் உங்களுடைய தலையீட்டு உத்தரவு செயலூக்கம் உடையதாக இருக்கும். மீறல்கள் அனைத்தையும் உடனடியாகத் தெரிவித்துவிடுங்கள்.

# ‘குடும்ப நீதிமன்ற உத்தரவுகள்’ என்பன யாவை?

குழந்தைகள் சம்மதப்பட்டிருந்தால், ‘குடும்ப நீதிமன்ற உத்தரவு’ ஒன்றிற்காக ‘குடும்ப நீதிமன்ற’த்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டுமா என்பதைப் பற்றிய முடிவினை **மேற்கொள்ள சட்ட ஆலோசனை பெறுவதற்கான அவசியம் இருக்கக்கூடும்**. சில தருணங்களில் ‘குடும்ப நீதிமன்ற உத்தரவு’ ஒன்று உங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.

**ஒரு ‘குடும்ப நீதிமன்ற உத்தர’வானது தலையீட்டு உத்தரவு ஒன்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிபந்தனைகளைப் புறக்கணிக்கலாம்** என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டியது முக்கியம். காவல்துறையினரால் உங்களுக்கு இதை விளக்கிச்சொல்ல இயலும்.

# 25 நவம்பர் 2017-க்குப் பிறகு கொடுக்கப்படும் தலையீட்டு உத்தரவுகள்

**25 நவம்பர் 2017 அன்று அல்லது அதற்குப் பிறகு** கொடுக்கப்படும் குடும்ப வன்முறை சம்பந்தப்பட்ட தலையீட்டு உத்தரவு ஒன்று **தேசிய அளவில்** இயக்கத்தில் இருக்கும் என்று புதிய அவுஸ்திரேலிய சட்டங்கள் சொல்கின்றன. நீங்கள் அவுஸ்திரேலியாவில் எங்கிருந்தாலும் உங்களுடைய தலையீட்டு உத்தரவு உங்களைப் பாதுகாக்கும் என்பது இதன் பொருள். அடுத்த நபரானவர் (பிரதிவாதி) அவுஸ்திரேலியாவில் எவ்விடத்திலும் தலையீட்டு உத்தரவிற்குக் கட்டாயம் கீழ்ப்படியவேண்டும்.

உங்களுடைய உத்தரவில் ஏதாவதொரு இடத்தில், பொதுவாக நிபந்தனைகளது அட்டவணையின் மேல் ‘தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட குடும்ப வன்முறை உத்தரவு’ (‘Nationally recognised DVO’) என்ற வார்த்தைகளை நீங்கள் காண்பீர்கள். உத்தரவானது எவ்வொரு மாநிலத்தில் அல்லது எல்லைப்பகுதியில் கொடுக்கப்பட்டிருந்தாலும், தேசிய அளவில் அங்கீகரிக்கப்படும் தலையீட்டு உத்தரவின் மீறல் மீது காவல்துறையினரால் நடவடிக்கை எடுக்க இயலும். தலையீட்டு உத்தரவு எங்கு கொடுக்கப்பட்டிருந்தாலும், ஒரு நீதிமன்றம் அதை அமல்படுத்தலாம், மாற்றலாம் அல்லது இரத்து செய்யலாம்.

# 25 நவம்பர் 2017-க்கு முன்னர் கொடுக்கப்பட்ட தலையீட்டு உத்தரவுகள்

**25 நவம்பர் 2017 -க்கு முன்பாக** உங்களுடைய தலையீட்டு உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தால், அதைக் கொடுத்த மாநிலம் அல்லது எல்லைப்பகுதி **மட்டிலுமே** அது இயக்கத்தில் இருக்கும் (உதாரணமாக, அடிலெய்டு நகரில் கொடுக்கப்பட்ட உத்தரவு ஒன்று சவுத் அவுஸ்திரேலிய மாநிலத்தில் மட்டுமே நடைமுறையில் இருக்கும்.

உங்களுடைய தலையீட்டு உத்தரவானது கூடுதல் மாநிலம் அல்லது எல்லைப்பகுதி ஒன்றில் இயங்குவதற்காக நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், இது மாறாமல் அப்படியே தொடரும். உங்களுடைய தலையீட்டு உத்தரவானது அதைக் கொடுத்த மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் உங்களைப் பாதுகாக்கும், **மற்றும்** நீங்கள் அதைப் பதிவு செய்துள்ள மாநிலம் அல்லது எல்லைப்பகுதியிலும் அது உங்களைப் பாதுகாக்கும்.

அவுஸ்திரேலியாவில் எவ்விடத்திலும் உங்களுடைய தலையீட்டு உத்தரவு இயக்கத்தில் இருக்கவேண்டுமென நீங்கள் விரும்பினால், உங்களுடைய தலையீட்டு உத்தரவு ஒரு நீதிமன்றத்தினால் **பிரகடனம் செய்யபப்படவேண்டும்** என்ற தெரிவினை நீங்கள் மேற்கொள்ளலாம். அவுஸ்திரேலியாவில் எவ்வொரு உள்ளூர் நீதிமன்றத்திற்கும் விண்ணப்பித்து நீங்கள் இப்படிச் செய்துகொள்ளலாம்.

சவுத் அவுஸ்திரேலிய மாநிலத்தில், ‘படிவம் 46கி’ எனும் நீதிமன்றப் படிவம் ஒன்றை நீங்கள் நிரப்பவேண்டியிருக்கும். www.courts.sa.gov.au எனும் வலைத்தளத்திலிருந்து இப் படிவத்தினை இறக்கம் செய்துகொள்ளலாம், அல்லது வேண்டுகோளின் மீது நீதிமன்ற அலுவலகம் ஒன்றினால் படிவத்தின் வன்பிரதி ஒன்றைக் கொடுக்க இயலும். ‘படிவம் 46கி’ –ஐ நீதிமன்ற அலுவலகத்தில் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

மாறாக, உங்களுடைய தலையீட்டு உத்தரவைப் பிரகடனப்படுத்துவதில் உங்களுக்கு உதவுமாறு ஒரு குடும்ப வன்முறை ஆய்வாளர், அல்லது காவல்துறை வழக்குத்தொடுனரை நீங்கள் கேட்கலாம் (உங்களுடைய விடயம் ஒன்று தற்போது நீதிமன்றத்தின் முன் இருந்தால்).

# தலையீட்டு உத்தரவை மாற்றவேண்டும் என்றால் என்ன செய்வது?

உங்களுடைய சூழ்நிலைகள் மாறினாலும், தலையீட்டு உத்தரவிலுள்ள நிபந்தனைகளில் எதையும் மாற்றவோ அல்லது உத்தரவை இரத்து செய்யவோ நீங்கள் விரும்பினாலும் நீங்கள் காவல்துறையினருடன் தொடர்புகொண்டு உத்தரவை மாற்ற விரும்புவதற்கான காரணங்களை அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

- பெருநகர்ப் பகுதியில், ‘குழந்தை மற்றும் குடும்ப ஆய்வு பிரி’வுடன் தொடர்புகொள்ளுங்கள்.
- நாட்டுப் பகுதியில், உங்களுடைய உள்ளூர் காவல் நிலையத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

உத்தரவு ஒன்றை மாற்றுவதற்கு அல்லது இரத்து செய்வதற்கு இன்னொரு நீதிமன்ற விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்படவேண்டும். **நீதிமன்றத்தினால்** மட்டுமே உத்தரவு ஒன்றை மாற்ற அல்லது இரத்து செய்ய இயலும் என்பதை நீங்கள் விளங்கிக்கொள்வது முக்கியம். நீங்களும் மற்ற நபரும் மாற்றம் ஒன்றிற்கு சம்மதிப்பதால் மட்டும் உங்களுடைய உத்தரவை மாற்ற இயலாது.

உங்களுக்கும் மற்ற நபருக்கும் நீதிமன்ற விசாரணையின் நேரமும் திகதியும் தெரியப்படுத்தப்படும். இதற்கு நீங்கள் நீதிமன்றத்தில் சமூகமளிக்க **வேண்டியிருக்கும்**. பெரும்பாலும், அடுத்த நபரும் சமூகம் அளிக்க வேண்டியிருக்கும், ஆனால் அனைத்து வேளைகளிலும் அல்ல.

**சிலவேளைகளில் சூழ்நிலைகள் நல்ல நிலைமைக்கு மாறும், மற்றும் உத்தரவுகளும் மாற வேண்டியிருக்கும் என்பதைக் காவல்துறையினரும், நீதிமன்றங்களும் அறியும். இருப்பினும், நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள், மற்றும் உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்தினருக்கும் அதிக ஆபத்து ஏற்படுத்தும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக உங்களுக்கு அழுத்தம் தரப்படவில்லை என்பதில் காவல்துறையினருக்குத் திருப்தி ஏற்படவேண்டும்.**

**சில வேலைகளில், தலையீட்டு உத்தரவை மாற்றுவதற்கான அல்லது இரத்து செய்வதற்கான விண்ணப்பத்தில் காவல்துறையினர் நீதிமன்றத்திற்கு வருவதால் நீங்கள் அல்லது உங்களுடைய குடும்பத்தினர் இன்னும் அதிகக் குடும்ப வன்முறைக்கு ஆளாவீர்கள் என்று காவல்துறையினர் கருதினால் அவர்கள் நீதிமன்றத்திற்கு வர சம்மதிக்கமாட்டார்கள்.**

# உதவிக்கு யாரை அழைப்பது?

| | |
|---|---|
| அவசரகால சூழ்நிலைகளுக்கு | 000 |
| காவல்துறையினரது உதவி/வருகைக்கு | 131 444 |

பெருநகர்ப் பகுதியில், உள்ளூர் **'குழந்தை மற்றும் குடும்ப ஆய்வு பிரி'** வுடன் தொடர்புகொள்ளுங்கள்.

| | |
|---|---|
| ஈஸ்டர்ன் டிஸ்ட்ரிக்ட் | 7322 4890 |
| அலுவல் இல்லா நேரத்தில் | 7322 4800 |
| நார்தர்ன் டிஸ்ட்ரிக்ட் | 8207 9381 |
| அலுவல் இல்லா நேரத்தில் | 8207 9411 |
| ஸதர்ன் டிஸ்ட்ரிக்ட் | 8392 9172 |
| அலுவல் இல்லா நேரத்தில் | 8392 9000 |
| வெஸ்டர்ன் டிஸ்ட்ரிக்ட் | 8207 6413 |
| அலுவல் இல்லா நேரத்தில் | 8207 6444 |

நாட்டுப் பகுதிகளில் உங்களுடைய உள்ளூர் காவல் நிலையத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

உங்களுடைய உள்ளூர் காவல் நிலையம் இருக்கும் இடத்தினை அறிய www.police.sa.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

குடும்ப வன்முறைக்கு ஆளான நீங்கள் ஆங்கிலம் பேசாத பின்புலத்தைச் சேர்ந்தவர் என்றால், தலையீட்டு உத்தரவு செயல்முறை என்ன என்று தெரிந்துகொள்வதில் ஆதரவுதவி பெற தயவுசெய்து **'புலம்பெயர்ந்த மகளிர் ஆதரவுதவித் திட்டம்'** எனும் சேவையுடன் 08 8152 9260 எனும் இலக்கத்தில் தொடர்புகொள்ளுங்கள் (இது 'SA மகளிர் பாதுகாப்பு சேவைகள்'என்பதன் ஒரு பகுதி).

நீங்கள் குடும்ப வன்முறைக்குப் பலியானவர் என்ற வகையில் உங்களுக்கு மேலதிகமாய் உதவக்கூடிய முகமைகளின் அட்டவணை ஒன்று உங்களுடைய உள்ளூர் காவல்நிலையத்தில் கிடைக்கும்.

# குறிப்புகள்